பிரகலாதன்



பிரகலாதன்

சுவாமி விவேகானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

வெளியிடுபவர் :
© தலைவர்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.

உரிமைப் பதிவு பெற்றது
மூன்றாம் பதிப்பு
III-10M 3C-4-92
ISBN 81-7120-430-9

அச்சிட்டவர் :
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை 600 004.

பிரகலாதன்

[கலிபோர்னியாவில் ஆற்றிய சொற் பொழிவு]

இரண்யகசிபு என்பவன் அசுரர்களின் அரசன். தேவர்கள் அல்லது கடவுளர்கள் பிறந்த அதே பெற்றோர்களுக்கு அசுரர்களும் பிறந்திருந்தாலும் எப்போதும் அவர்கள் தேவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அசுரர்களுக்கு, மனிதர்கள் அளிக்கும் காணிக்கைகளிலும் நிவேதனங்களிலும் பங்கில்லை, உலக அரசாட்சியிலும் அதை நடத்திச் செல்வதிலும் அவர்களுக்கு உரிமை இல்லை. ஒரு சில நேரங்களில், அவர்கள் வலிமை அதிகரிக்கப் பெற்று, தேவர்களை விண்ணிலிருந்து விரட்டிவிட்டு, அவர்களுடைய அரியாசனத்தில் தாங்கள் அமர்ந்து ஆட்சி புரி

வார்கள். அப்பொழுது எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளாகிய திருமாலைத் தேவர்கள் தொழுவார்கள். அவர்கள் துன்பத்தை அவர் போக்கியருள்வார். அசுரர்கள் துரத்தியடிக்கப்பட்டு, தேவர்கள் மீண்டும் தேவலோகத்தில் ஆட்சி புரிவர்.

அசுரர்களின் அரசனுன இரண்யகசிபு தன் முறை வந்ததும், தன் பங்காளிகளான தேவர்களை வென்று தேவலோக அரியாசனத்தில் அமர்ந்து மனிதர்களும் விலங்குகளும் வசிக்கும் நடு உலகம், தேவர்களும் தேவர்களைப் போன்றவர்களும் வசிக்கும் தேவ லோகம், அசுரர்கள் வசிக்கும் பாதாள லோகம் ஆகிய மூன்று உலகங்களையும் ஆண்டுவந்தான். தானே உலகனைத்துக்கும் கடவுள் என்றும், தன்னைத் தவிர வேறு ஒரு கடவுளும் இல்லையென்றும், யாரும் திருமாலை வணங்கக்கூடாதென்

றும், அனைவரும் தன்னைத்தான் வணங்க வேண்டும் என்றும் உத்தர விட்டான் இரண்யகசிபு.

இரண்யகசிபுவிற்குப் பிரகலாதன் என்றொரு மகன் இருந்தான். இந்தப் பிரகலாதன் சிறு வயதிலிருந்தே கடவுளிடம் ஈடுபாடு கொண்டிருந்தான். உலகத்திலிருந்து தான் விரட்ட விரும்பிய தீமை தன் குடும்பத்திலேயே முளைக்குமோ என்று பயந்த இரண்ய கசிபு, சண்டர் அமர்க்கர் என்னும் கண்டிப்பு மிகுந்த இரண்டு ஆசிரியர்களைத் தன் மகனுக்குக் கற்பிக்க நியமித்தான். 'விஷ்ணு' என்னும் பெயர்கூடப் பிரகலாதன் காதில் விழக்கூடாது என்று கடுமையான கட்டளையிட்டிருந்தான்.

ஆசிரியர்கள் சிறுவனைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவன் வயதொத்த மற்றச் சிறுவர்களுடன் பழ

கும்படி ஏற்பாடு செய்தார்கள்.

ஆனல் சிறுவன் பிரகலாதனே, பாடங்கள் படிப்பதை விடுத்து, திருமாலை எப்படி வணங்குவது என்று மற்ற பிள்ளைகளுக்குக் கற்பிக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட ஆசிரியர்கள் பயந்தார்கள். வல்லமை மிக்க இரண்யகசிபுவின் கோபம் தங்கள்மீது பாயுமோ என்று நடுங்கினர்கள். சிறுவன் அப்படிச் செய்யாமல் பார்த்துக் கொள்ள எவ்வளவோ முயன்றார்கள். ஆனல் மூச்சுவிடாமல் எப்படி இருக்க முடியாதோ, அவ்வாறே பிரகலாதனல் திருமாலை வணங்காமலும் அவரைப் பற்றிப் போதிக்காமலும் இருக்க முடியவில்லை. தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆசிரியர்கள் இரண்யகசிபுவிடம் அவருடைய மகன், தான் மட்டும் திருமாலை வணங்குவது போதாது என்று மற்றச் சிறுவர்களையும்

விஷ்ணுவை வணங்குமாறு கூறி அவர் களையும் கெடுக்கிறுன் என்று சொன் ஞர்கள்.

இதைக் கேட்டு மன்னன் வெகுண்டு, பிரகலாதனை அழைத்தான். திருமாலை வணங்குவதை விட்டுவிடுமாறு பிரகலா தனுக்கு நயமாக எடுத்துக் கூறித் தடுக்க முயன்ருன். அரசனுகிய தானே வணங்குதற்குரிய ஒரே கடவுள் என் றும் அவனுக்கு அறிவுறுத்தினுன். ஆனுல் பயன் இல்லை. எங்கும் நிறைந் துள்ள இறைவனுன திருமாலே வணங்குதற்குரிய பரம்பொருள் என் றும், திருமால் விரும்பும் வரை யில்தான் அரசனுக அரியாசனத்தில் இருக்க முடியும் என்றும் மீண்டும் மீண்டும் பிரகலாதன் எடுத்துரைத் தான். அரசன் எல்லேயில்லாக் கோபம் கொண்டு சிறுவன் உடனே கொல்லப் பட வேண்டும் என்று உத்தரவிட்

டான். அசுரர்கள் கூர்மையான ஆயு தங்களால் அவனைக் குத்தினார்கள். ஆனால் பிரகலாதனின் மனம் திருமா லிடமே நிலைத்திருந்ததால் வலியையே அவன் உணரவில்லை.

இதைக் கண்ட அவனது தந்தை யான அரசன் பயந்துவிட்டான், அசுரர்களுக்கே உரிய கொடிய வெறி அவனைப் பற்றிக் கொண்டது. சிறு வனைக் கொல்வதற்குப் பல கொடுமை யான முறைகளைக் கையாண்டான். யானையின் கால்களால் அவனை நசுக் கும்படி உத்தரவிட்டான். சீற்றம் கொண்ட யானையாலும் அவனை நசுக்க முடியவில்லை. அவனை நசுக்கு வது ஒரு இரும்புப் பாளத்தை நசுக்கு வது போல அதற்குத் தோன்றியது.

இந்த முயற்சி பயனற்றுப் போகவே, சிறுவனைச் செங்குத்தான பாறையின் உச்சியிலிருந்து கீழே தள்

ளும்படி அரசன் உத்தரவிட்டான். அப்படியே செய்தார்கள். ஆனால் பிரகலாதனின் இதயத்தில் திருமால், குடி கொண்டிருந்ததால், புல்லின் மீது மலர் எவ்வளவு மெதுவாக விழுமோ, அவ்வளவு மெதுவாகத் தரையில் விழுந்தான். நஞ்சு உண்ணக் கொடுத்தல், தீயிலிடுதல், பட்டினி போடுதல், கிணற்றில் தள்ளுதல், மாந்திரீகம் செய்தல் போன்ற பல வழிகள் ஒன்றன்பின் ஒன்ருக கையாளப் பட்டன. ஆனால் ஒன்றும் பலன் இல்லை. யாருடைய இதயத்தில் திரு மால் வாழ்கிருரோ அவரை எதுவும் ஒன்றும் செய்ய முடியாது.

இறுதியில், அந்தச் சிறுவனைப் பாதாள உலகத்திலிருந்து கொண்டு வரப்பட்டக் கொடிய பாம்புகளுடன் பிணைத்துக் கடலின் ஆழத்தில் விட்டு, அவன்மீது பெரிய மலைகளைக் குவிக்கு

மாறு அரசன் கட்டளையிட்டான், அப்படிச் செய்வதால் உடனே இறக்காவிட்டாலும் நாளடைவில் அவன் இறந்து விடுவான் என்று நினைத்தான். மேலும் அவனை அத்தகையக் கொடுமையான நிலையிலேயே விட்டுவைக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டான். இந்த நிலையிலும் சிறுவன், ''புவன நாயகனே! எழில்மிகு திருமாலே உமக்கு வணக்கம்!'' என்று தன் அன்பிற்குரிய திருமாலைத் தொடர்ந்து தொழுது கொண்டே இருந்தான், திருமாலைச் சிந்தித்துக் கொண்டும், தியானித்துக் கொண்டும் இருந்ததால் திருமால் அவனது பக்கத்திலேயே இருப்பது போலவும், அவர் அவனுடைய ஆன்மாவிலேயே உறைவது போலவும், நினைக்கத் தொடங்கி, முடிவில் தானே திருமால், தானே அனைத்தும் ஆனவன், தானே எங்கும்

நிறைந்தவன் என்பதை உணரத் தொடங்கினான்.

இந்த நிலையைத் தெரிந்து கொண்ட உடனே, பாம்புத் தளைகள் அறுந்தன, மலைகள் பொடியாயின. கடல் மேலே கிளம்பி அவனை மெல்ல அலைகளுக்கு மேலே தூக்கிச் சென்று பத்திரமாகக் கரை சேர்த்தது. பிரகலாதன் எழுந்து நின்றபோது தான் ஓர் அசுர குலத்த வன் என்பதையும், தனக்கு அழிந்து போகும் ஓர் உடல் உள்ளது என்பதை யும் மறந்தான். தானே உலகம் என் றும் உலக சக்திகள் அனைத்தும் தன் னிடமிருந்தே வெளிப்படுகின்றன என்றும், தனக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது இயற்கையில் ஒன்றுமில்லை என்றும், தானே இயற்கையின் நாய கன் என்றும் உணர்ந்தான். இடை யறாத இன்ப வெள்ளத்தில் காலம் கழிந்தது. பிறகு பிரகலாதன் மெள்ள

மெள்ளத் தனக்கு உடல் இருப்பதை யும், தான் பிரகலாதன் என்பதையும் உணரத் தொடங்கினன். உடலைப் பற்றிய உணர்வு மீண்டும் வந்ததும், கடவுள் உள்ளும் இருக்கிறர், புறமும் இருக்கிறர், எல்லாம் திருமாலே என் பதை அவன் உணர்ந்தான்.

தன் எதிரியான திருமாலிடம் முழு மையான பக்திகொண்ட அந்தச் சிறு வனை ஒழிக்கத் தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் பயனற்று விட்ட தைக் கண்டு இரண்யகசிபு மன்னன் அச்சமடைந்து என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தான்.

சிறுவனை அரசன் மீண்டும் தன்னி டம் அழைத்து, தன் அறிவுரையை ஏற்குமாறு நயமாக வற்புறுத்திக் கூற முயன்றன். ஆனல் பிரகலாதன் அதே பதிலையே சொன்னன். எனினும், இந் தச் சிறுவனின் குழந்தைப் பருவச்

சபலபுத்தி, வயது முதிர்ச்சியாலும் தக்கப் பயிற்சியாலும் சீரடைந்து விடும் என்று எண்ணி, மீண்டும் சண்டர், அமர்க்கர் என்னும் ஆசிரியர் கள் பொறுப்பில் அவனை ஒப்படைத்து அரசனுக்குரியக் கடமைகளை அவனுக் குக் கற்பிக்குமாறு கூறினான்.

ஆனால் இந்தப் போதனைகள் பிரக லாதனின் உள்ளத்தில் ஏறவில்லை. திருமாலை வழிபடும் விதிமுறையைத் தன் பள்ளித் தோழர்களுக்குக் கற்றுக் கொடுப்பதிலேயே, அவன் தனது காலத்தைக் கழித்தான்.

இதைக் கேள்வியுற்ற அவனது தந்தை மீண்டும் கடுஞ்சீற்றம் கொண்டு சிறுவனை அழைத்து, அவ னைக் கொன்று விடுவதாகப் பயமுறுத் தினான், திருமாலைத் தரக்குறைவாக ஏசினான். ஆனால் பிரகலாதனோ, திரு மாலே பிரபஞ்சம் அனைத்திற்கும்

தலைவர் என்றும் முதல் முடிவு அற்றவரென்றும் எல்லாம் வல்லவர் என்றும் எங்கும் நிறைந்தவரென்றும் அவர் ஒருவரே வணங்குதற்கு உரியவர் என்றும் விடாப்பிடியாக மீண்டும் மீண்டும் கூறிவந்தான்.

அரசனே கோபத்தால் சீறினன். ''ஓ! தீயவனே! உன் திருமால் எங்கும் இருப்பவன் என்றால் ஏன் இங்கே, இந்தத் தூணில் இல்லை?'' என்று கேட்டான்.

''அவர் அங்கும் இருக்கிறார்'' என்று மிகவும் பணிவுடன் பிரகலாதன் சொன்னான். ''அப்படியானால் அவன் உன்னைக் காப்பாற்றட்டும். இந்த வாளினால் உன்னைக் கொல்லப் போகிறேன்'' என்று கூறிக் கொண்டே இரண்யகசிபு கையில் வாளோடு பிரகலாதனிடம் விரைந்து வந்து, அந்தத் தூணில் பலமாக ஓங்கி வீசினன். உடனே பேரிடியை ஒத்த ஒரு சத்தம் கேட்டது. தம்முடைய நரசிம்ம உருவத்தில், அதாவது பாதி மனிதன் பாதி சிங்க உருவத்தில் திருமால் தூணி

லிருந்து வெளிப்பட்டார். அங்கிருந்த அசுரர்கள் அஞ்சி நடுங்கி எல்லாத் திசைகளிலும் ஓடினார்கள். ஆனால் இரண்யகசிபு, நெடுநேரம் வெறித்தனமாக அவருடன் போர் புரிந்தான். இறுதியில் ஒடுக்கப் பட்டுக் கொலையுண்டான்.

தேவர்கள் விண்ணுலகிலிருந்து இறங்கி வந்து திருமாலைத் துதித்தார்கள். பிரகலாதன் அவர் காலில் விழுந்து மிக அழகிய பாடல்களால் அவரைப் பாராட்டினான். அப்பொழுது, ''பிரகலாதா! என் அருமைக் குழந்தாய்! உனக்கு என்ன வேண்டுமோ, கேள்'' எனக் கடவுளின் குரல் கேட்டது. உணர்ச்சிகள் தொண்டையை அடைக்கப் பிரகலாதன், ''பகவானே! நான் தங்களைத் தரிசித்து விட்டேன். இதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? பூலோக, தேவலோக இன்பங்களைக் காட்டி என்னை மயக்காதீர்கள்.'' என்றான்.

''ஏதாவது கேள், என் மகனே!'' என்றது குரல். ''அஞ்ஞானிகள் உலகப்

பொருள்களின் மீது எவ்வளவு தீவிர அன்பு கொண்டிருக்கிருர்களோ. அதே அன்பு நான் உங்கள்மீது கொள்ள அருள் புரிய வேண்டும். அந்த அன்பு, அன்பிற்காகவே தவிர, வேறு எதற்காகவும் இருக்கக்கூடாது'' என்ருன்.

அப்பொழுது பகவான் சொன்னர், ''பிரகலாதா! என்னுடைய தீவிர அடியார்கள், இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி, எதற்கும் ஆசைப் படுவதில்லை. இருந்தும் இந்தக் கால வட்டம் முடியும் வரையில் நீ இந்த உலகின் இன்பங்களைத் துய்க்க வேண்டும். என்னிடம் மனத்தைச் செலுத்தி, புண்ணியச் செயல்கள் செய்ய வேண்டும். பிறகு, காலம் வந்ததும், நீ உடலைவிட்டு, என்னை வந்து அடையலாம்'' என்று இவ்வாறு பிரகலாதனை வாழ்த்திவிட்டுத் திருமால் மறைந்தார். பிறகு பிரம்மன் முதலான தேவர்கள் பிரகலாதனை அரியாசனத்தில் அமர்த்திவிட்டு, அவரவர் இடத்திற்குத் திரும்பிச் சென்ருர்கள்.

ISBN 81-7120-430-9

சிறுவர் நூல்கள்

சிறுவர்களுக்கான ஸ்ரீராமகிருஷ்ணர் கதை

பாப்பாவுக்கு ராமகிருஷ்ணர்

ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதைகள்

சிறுவர்களது விவேகானந்தர்

நமது விவேகானந்தர்

சிறுவர்களுக்கான ராமாயணம்

சிறுவர்களுக்கான மகாபாரதம்

கண்ணன் கதைகள் (இரண்டு பாகங்கள்)

சிறுவர்களுக்கான ஆதிசங்கரரின் கதை

Prahaladan Re. 1. 00